**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

19.06.2025

O.S. No. 63/2022

P.W.1 திரு.பேரின்பசிகா

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) -**

கிரய உடன்படிக்கை பத்திரத்தில் கையொப்பம் செய்யும்போது வழக்கு சொத்திற்கு மனை பிாிவு அங்கீகாரம் கிடையாது என்ற விவரம் எனக்கு தொியும் என்றால் சரிதான். அதை தொிந்து கொண்டேதான் நான் ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதற்கான நடவடிக்கை நிலுவையில் இருந்தது. கிரய உடன்படிக்கை பத்திரத்தில் 3 வது பக்கத்தில் கிரய ஒப்பந்தத்திலிருந்து ஆறு மாத கால அவதிக்குள் மீதி கிரயத் தொகையை கொடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல கிரய உடன்படிக்கை பத்திரத்தில் 5 வது பக்கத்திலும் ஆறு மாத கால அவதிக்குள் மீதி கிரயத் தொகை கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கிரய ஒப்பந்த பத்திரத்தில் 2 தரப்பினருக்கும் ஆறு மாத கால அவதிதான் கொடுக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தொியும் என்றால் சரிதான். நான் எவ்வளவு முன்பணம் கொடுத்துள்ளேன் என்றால் ரூபாய் 11,00,000/- கொடுத்துள்ளேன். அது கிரய ஒப்பந்தம் செய்த தேதியில் கொடுத்தது என்றால் சரிதான். 18.04.2010 முதல் இந்த வழக்கு தாக்கல் செய்த வரையில் நான்

வேறு தொகை எதுவும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். மீதி தொகை எங்களிடம் இருக்கிறது என்றும் அதை பெற்றுக்கொள்ள கோரியோ வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் இந்த வழக்கிற்கு முன்பு வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக முதன் முதலாக பிரதிவாதி தரப்பில் தான் கிரய முன்பண தொகையை திரும்ப பெற்றுகொள்ளுமாறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். இன்று வரையில் வழக்கு சொத்திற்கு மனை பிாிவு அங்கீகாரம் பெறவில்லை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. ஒப்பந்த சமயத்தில் ஊராட்சி தலைவரின் அங்கீகாரம் பெற்ற ஆவணங்களை என்னிடம் காட்டியிருந்தார். அங்கீகார ஆவணத்தை எனக்கு எந்த தேதியில் காண்பித்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை, 2018 ஆம் வருடம் காண்பித்தார். நான் தாக்கல் செய்த பிராதில் பத்தி 12 ல் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தொியுமா என்றால் அது ஆங்கிலத்தில் இருப்பதால் அது புாியவில்லை. பிரதிவாதி கூடுதல் தொகையை கேட்டதாக அந்த பத்தியில் கூறப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு அவர் என்னிடம் கூடுதல் தொகை கேட்கவில்லை. 6 மாதத்திற்குள் நான் கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்காததாலும், கொடுக்க தயார் நிலையில் இல்லாததாலும், இந்த வழக்கு சொத்தை விலைக்கு பெறுவதற்கு எனக்கு தகுதி இல்லை என்றாலும் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கும், எனக்கு வழக்கு மூலம் இல்லை என்றாலும் சரியல்ல. வாங்குவதற்கு நான் தயாராக தான் இருந்தேன். நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக மீதித் தொகையை தருவதற்கு தயார் நிலையில்

இருந்தேன் என காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே மீதித் தொகையை கொடுக்க நான் தயாராக இருந்தால், முன்பாகவே இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் பல ஆண்டுகள் பணம் கொடுக்க தயாராக இல்லாததால் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. காலதாமதத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.